**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.106/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் செவ்வாய் கிழமை அ.சா.14 (பட்டியல் சாட்சி–17) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கே.சங்கீதா | க/பெ.: | வரதராஜன் |
| கிராமம்: | திருவாரூர், சிவனாண்டார் கோவில். | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | தலைமைக்காவலர், முத்துப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம். |
| வயது: | 32 | முகவரி: | திருவாரூர், சிவனாண்டார் கோவில். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.08.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது முத்துப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 15.02.2022ம் தேதி திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.87/2022, ச.பி.174 கு.வி.மு.ச பிரிவின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் கண்ட இறந்து போன சந்தியா என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்வதற்காக உதவி ஆய்வாளர் உத்தரவு படி நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவரின் அறிவுரையின் படி திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு எடுத்து சென்று பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்ய வேண்டி மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் மருத்துவர் இறந்து போன சந்தியா என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்து பின்னர் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்.

பின்னர் நான் பிரேதத்தை அவரின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பின்னர் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள் உறுப்புகளை தஞ்சாவூரில் உள்ள தடய அறிவியல் பகுப்பாய்வு துறைக்கு ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.